ආයතනයේ නම : දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - මොනරාගල

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

## நிறுவனத்தின் பெயர்: மொனராகலை மாவட்ட செயலாளர் அலுவலகம்

பாராளுமன்ற அரச கணக்குகள் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல்

## Name of the institution: District Secretariat – Monaragala

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on public Accounts in terms of Standing Order No. 119 (4)

இணைப்பு-1

பாராளுமன்றத்தில் அரச கணக்கு தொடர்பான செயற்குழுவினால் சபைக்கு முன் வைக்கப்பட்ட நிலையியல் கட்டளை 119 (4) தொடர்பாக தங்களது அவதானிப்பு மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் 183**
**மாவட்ட செயலாளர் அலுவலகம் : மொனறாகலை.**

| **அ.க.செ.சபையினால் குறித்துக் காட்டப்பட்ட குறைபாடுகளும் வழிகாட்டல்களும்.** | **கணக்கீட்டு உத்தியோகத்தரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.** | **நிகழ்கால முன்னேற்றம்.** |
|---|---|---|
| 2004.05.11 திகதியிடப்பட்டதும் 171/2004 இலக்கமுடையதுமான அரசாங்க கணக்கு சுற்றுநிருபத்திற்கமைவாக அரச சம்பளம் தாயரிக்கப்படும் கணனி மென்பொருளுக்குரிய முதலாம் இரகசியச் சொல்லை கணக்காளர் அல்லது அங்கீகாரமளிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் மாத்திரம் பயன்படுத்தாமை. சம்பந்தப்பட்ட இரகசியச் சொல்லை மூன்று மாதத்திற்கொரு முறை மாற்றம் செய்யப்பட்டிராமை. | உத்தியோகத்தர்களுக்குத் தெளிவூட்டப்பட்டுள்ளது. | 2023 ஆம் அண்டிலிருந்து அறிவுறுத்தலுக்கமைய செலாற்றுதல் |
| கணக்காய்வாளரினால் முன் வைக்கப்பட்டுள்ள விசாரணைக்கென ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படாமை. | பதிலளிப்பதற்கு காலந் தாழ்த்தப்படும் சந்தர்ப்பங்களில் இடைக் கால பதிலொன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்.<br>பிரதேச செயலகங்களின் கணக்காய்வு விசாரணைகளுக்குரிய அனைத்து உத்தியோகத்தர்களையும் வரவழைத்து கணக்காய்வு கலந்துரையாடல்களை நடாத்தி துரிதமாக பதிலைப் பெற்றுக் கொள்ளுதல்.<br><br>பிரதேச செயலகங்களின் தபால் மூல பதிலைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் மின்னஞ்சலூடாக பதிலைப் பெற்றுக் கொள்ளுதல்.<br><br>கணக்காய்வு கிடைத்தவுடன் துரிதமாக பதிலை முன் வைப்பதற்காக உத்தியோகத்தர்களுக்குத் தெளிவூட்டுதல். | கணக்காய்வு விசாரணைகளுக்கென பதிலைப் பெற்றுக் கொள்ளுதல் தாமதமாகுதலைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| உள்ளக கணக்காய்வு விசாரணைக்கென ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்படாமை. | இது தொடர்பாக அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தெளிவூட்டப்பட்டுள்ளது. | கணக்காய்வு விசாரணைகளுக்கென பதிலைப் பெற்றுக் கொள்ளுதல் தாமதமாகுதலைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| வாகனமொன்று பயன்பாட்டுக்கு ஏற்றதல்லவென அறிவிக்கப்பட்டு 06 மாதத்திற்குக் குறைந்த காலத்தினுள் ஒதுக்கப்படாமை. | மொனராகலை மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான பயன்பாட்டுக்கு ஏற்றதல்லவென அறிவிக்கப்பட்ட வாகனம் 2022.12.21 அன்று ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 2016.12.29 திகதியிடப்பட்டதும் 2019/30 இலக்கமிடப்பட்டதுமான அரச நிருவாக சுற்றுநிருபத்தின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் செலவாகுதல் தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டிராமை. | 2022 ஆம் ஆண்டில் நிலவிய எரிபொருள் பிரச்சினை காரணமாக இக் காரியாலயத்திற்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் செலவாகுதல் தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டிராத அதேவேளை இந்த வருடத்திற்கென செலவாகும் எரிபொருள் அளவினை பரிசீலனை செய்து துரிதமாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு மோட்டார் வாகன பரீட்சகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பெப்ரவரி மாதத்திற்குள் எரிபொருள் செலவினை பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| நி.பி.-4 (1) பிரகாரம் செலவுத் தலைப்புக்கு ஒழுங்குப் படுத்தப்பட்டிருந்த ஒதுக்கீட்டை பயன்படுத்திய பின்னர் வருட இறுதியில் ஒதுக்கீட்டு எல்லையை மீறிச் செல்லும் வகையில் பொறுப்புகள் செலவுகளை அடைந்துள்ளமை. | உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டப்பட்டுள்ளது. | தற்போது சரியாக செயற்படுத்தப்படுகின்றது. |
| ஒரு வருடத்திற்கு மேலான காலத்திலிருந்து கடன் நிலுவை மீதியாக உள்ளமை. | மாகாண சபையினால் கடன் நிலுவையை மாதாந்தம் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தாபன விதிக் கோவையின் 14 வது அத்தியாயத்தில் 4.6 வாசகத்திற்கிணங்க கடன் நிலுவையை அறவிட்டுக் கொள்வதற்காக நீதிபதி அவர்களின் அறிவுறுத்தல் கோரப்பட்டுள்ளது. கணக்கு வைத்தலில் காணப்படும் குறைபாடுகளை சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு தேவையான விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. | **<u>கடன் நிலுவை விபரம்.</u>**<br><br>2020.12.01 மீதியாகவுள்ள கடன் நிலுவை ரூ. 2,138,929.37<br><br>இது வரை அறவிடப்பட்டுள்ள தொகை: ரூ.742,973.05<br><br>2022.12.31.ற்கு நிலுவையாகவுள்ள கடன் மீதி ரூ.1,395,956.32. |
| காலங் கடந்த வைப்புகள் தொடர்பாக நி.பி.571 பிரகாரம் செயற்படாமை. | உரிய பிரிவுகளுக்குத் தெளிவூட்டப்பட்டு தெளிவுப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தலும் தெளிவுப்படுத்திக் கொள்ள முடியாத வைப்புகள் அரச வருமானத்தில் வைப்பிலிடுதலும். | கணக்காய்வு விசாரணைக்குட்பட்ட வைப்புகள் தவிர்ந்த ஏனைய வைப்புகளிலுள்ள மீதியை தெளிவுப்படுத்திக் கொள்ளுதல். |
| அனுமதிக்கப்பட்ட எல்லையை மீறி பணிக்குழுவினரை ஆட்சேர்ப்பு செய்துள்ளமை. | அனுமதிக்கப்பட்ட எல்லையை மீறி பணிக்குழுவினராக பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அலுவலகத்திற்கு இணைப்பு செய்தல் மேற் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கென அமைச்சினது அறிவுறுத்தல் கிடைக்கப்பட்டுள்ளது. | ஏனைய அனைத்து சேவைகளுக்கும் மேலதிக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவில்லை. |
| வாடிக்கையாளர் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் தொடர்பாக மேற்பார்வைக்கு அல்லது மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவதற்கு முறையியலொன்று தயாரிக்கப்பட்டிராமை. | வாடிக்கையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக குறுந் தகவல்கள் பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் முறைப்பாடுகளை பொறுப்பேற்றுக் கொள்வதற்கான முறையியல்,தொலைப்பேசி மூலம் அறிவிக்கும் முறைகளைக் கடைபிடித்து பிரஜைகளுக்கான சட்டத்தை நடைமுறைப்படுத்தாத | இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கும் போது அது தொடர்பான தேவையான விடயங்களை கலந்துரையாடி தீர்வுகளும் பரிகாரங்களும் வழங்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் போது பொது மக்களுக்கு முறைப்பாடு செய்வதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. | |
| தயாரிக்கப்பட்டுள்ளன மனிதவள திட்டத்தின் மூலம் ஒரு பணியாளருக்கென குறைந்த பட்சம் ஒரு வருடத்தில் 12 மணித்தியாளங்கள் மேலதிக பயிற்சிகள் தீர்மானிக்கப்பட்டிராமை. | ஒட்டுமொத்த பணிக்குழுவினரை உள்ளடக்கும் வகையில் 2023 ஆம் ஆண்டிற்கென மனிதவள திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | கிடைக்கும் ஒதுக்கீட்டுக்கு அமைவாக எதிர்காலத்தில் பயிற்சி பாடநெறிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| ஒட்டுமொத்த பணிக்குழுவினரையும் உள்ளடக்கும் வகையில் செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு உடன்படிக்கைப்படுத்தப்படாமை. | மொனராகலை மாவட்ட செயலகத்தின் அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் செயலாற்றுகை தரங் கணிப்புக்கென செயலாற்றுகைச் சுட்டியொன்றை வழங்குதல் 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் செயலாற்றுகை ஒப்பந்தத்தை உத்தியோகத்தர்களுக்கு வழங்கி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 2020 ஆம் ஆண்டிலிருந்து செயலாற்றுகை மதிப்பீட்டு முறையியலொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. | அனைத்து உத்தியோகத்தர்களுக்கெனவும் செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு உடன்படிக்கைப் படுத்துதல் தற்போதுவரை தற்காலப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்படுகின்றது. |
| திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ள பயிற்சி வாய்ப்புகள் 50% த்திற்கும் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றமை. | கொவிட் வைரஸ் பரம்பல்,எரிபொருள் தட்டுப்பாடு போன்ற காரணங்களினால் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பயிற்சி பட்டறைகளை நடாத்துவதற்கு தடை விதிக்கட்டிருந்த காரணத்தினால் முழுமையான முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடியாமல் இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டிலிருந்து திட்டமிட்ட அடிப்படையில் பயிற்சிகளை நடாத்துவதற்கு உத்தியோகத்தர்களுக்குத் தெளிவூட்டப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டிலிருந்து பயிற்சிக்கான திட்டங்களைத் தயாரித்து உரிய முறையில் பயிற்சிகளை நடாத்துவதற்குத் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| கணக்காய்வு பந்திகளில் குறித்துக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகள்/தவறுகளை சரி செய்யப்பட்டிராமை. | அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தெளிவூட்டப்பட்டுள்ளது.தேவையான சந்தர்ப்பங்களில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பிழையான கொடுப்பனவுகளுக்காக மீள அறவிடுவதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.வேறு நிறுவனங்களின் தலையீட்டின் அடிப்படையில் தெளிவுப்படுத்திக் கொள்ள வேண்டிய விடயங்களுக்காக அந் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அனேகமான தவறுகள் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளதுடன் தெளிவுபர்படுத்தப்படாத தவறுகளை தெளிவுப்படுத்திக் கொள்வதற்கென தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்,
மொனராகலை

R.M.P.S.B. Rathnayaka
District Secretary/Government Agent
Monaragala

பிரதம கணக்காளர், (Acting)
மாவட்ட செயலகம்,
மொனராகலை

P.N.P. Pathirana
Accountant
District Secretariat
Monaragala

செயலாளரின் பரிந்துரை

---

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Neel Bandara Hapuhinne
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
Home Affairs Division

நீல் பண்டார ஹபுஹின்ன
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

---

அரசாங்க கணக்குக் குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளருக்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2023 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவ மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)
பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.